அதற்கு தோட்டக் கலை துறையை கேளுங்கள் என்று பதில் கூறு கிறார்கள். மேலும் அவர்களிடம் தென்னங்கன்றுகள் வேண்டு மென்று விவசாயிகள் கேட்டால் எண்ணெய் வித்துத் துறையை கேளுங்கள் என்று கூறுகிறார்கள். எனவே விவசாயிகள் சிரமப் படுகிற நிலை தற்போது இருக்கிறது. எனவே அனைத்தும் வேளாண்மை வளர்ச்சி அலுவலகத்திலே கேட்டு தெரிந்து கொள் ளும் வகையில் அனைத்துப் பொருட்களும் அவர்களே கொடுப்ப தற்கு அரசு வழி வகை செய்யுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இனிமேல் கேள்விகளுக்கு இடமும் இல்லை என்று கருதுகிறேன்.

பாசன வசதி.

* 7262. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பாசன ஏரி, குளங்களில் தண்ணீர் கிடைக்காத நேரத்தில் ஏரி, குளங்களின் மத்தியில் அரசு குழாய் கிணறுகளை நிறுவி மோட்டார் பம்பு செட்டு அமைத்து பாசன வசதி அளிக்க முன் வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; ஆண்டுதோறும் மழையின் அளவானது குறைந்து கொண்டே வருகிற இந்தச் சூழ்நிலையில் ஏரிப் பாசனத்தை மட்டும் நம்பி வாழ்ந்துக் கொண்டிருக்கிற விவசாய மக் களுக்கு அவர்களுடைய பயிரை பாதுகாக்க இதேபோன்று ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று முன் இதே மன்றத்திலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. முன்பு குழாய்க் கிணறு வாரியத்தின் மூலமாக ஆதி திராவிட மக்களுக்கு இதே போன்று பாசன வசதி

களை தென்னாற் காடு, செங்கை அண்ணா, தஞ்சாவூர், இராமநாத புரம் மாவட்டங்களில் செய்வதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அதற்கான ஒப்புதலும் அளிக்கப்பட்டு செலவும் செய்யப்பட்டிருக் கிறது. சூழ்நிலை காவிரி வறண்டு வருகிற இந்தச் சூழ்நிலையில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விரிவுரையில் இறங்கக் கூடாது. வினாவாகக் கேட்டால்தான் இனிமேல் அனுமதிப்பேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : அரசே அதை மறுபரிசீலனை செய்து விவசாயிகளை வாழ்விக்க இந்தத் திட்டத்தை மீண்டும் கொண்டு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

9-55 மணி

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ், இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன், காமராசர் ஆகிய மாவட்டங்களில் சில இடங்களில் பாசன ஏரி, குளங்களில் சமுதாய குழாய் கிணறுகள் நிறுவப்பட்டுள்ளன. ஆனால் இவ்வாறான ஆழ் குழாய் கிணறுகள் அமைக்க மத்திய அரசு அனுமதிக்காததால் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத் தின் கீழ், 1988–89 ஆம் ஆண்டு முதல் சமுதாய குழாய் கிணறு களுக்குப் பதிலாக, திறந்த வெளிக் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; இன்றைக்கு காவிரி பிரச்சினையானது நீண்டு கொண்டு வருகின்றது. ஒரு நல்ல முடிவு ஏற்படும் என்ற இந்தச் சூழ்நிலையில் அந்தப் பகுதியில் வாழ்கின்ற விவசாயப் பெரு மக்களுக்கு ஊற்று நீர் மிக அதிகமாகக் கிடைக்கின்ற சூழ்நிலையில் அந்தப் பகுதியிலே இது போன்ற திட்டத்தை அரசு செயல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் மூலக் கேள்வி கேட்டது ஏரியில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து பாசன வசதியை அளிக்க முடியுமா என்று. அதற்கான விளக்கத்தைத் தந்தேன். ஆனால் ஏரியிலே எல்லா இடங்களிலும் தண்ணீர் இருக்கும் என்று நாம் எதிர் பார்க்க முடியாது. மழைக் காலங்களில் பரவலாக பல் வேறு பகுதிகளில் ஏரிகளிலே தண்ணீர் நிற்கிறது. ஆகவே, ஏரி யிலே ஊற்று இருக்கின்றது என்று கருத இடம் இல்லை.